வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு
කලාප අධ්‍යාපන කාර්යාලය, වවුනියාව උතුර
ZONAL EDUCATION OFFICE, VAVUNIYA NORTH

தரம் :-04 தமிழ் நிலையறிபரீட்சை-2022 நேரம் :- 1.30மணி

**01. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

**1. பெற்ற தாயை மறவாதே' என்னும் பாடலைப் பாடியவர் யார்?**

1. அழவள்ளியப்பா 2. தே.ப பெருமாள் 3. செல்ல கணபதி

**2. உப்பு உவர்க்கும் என்பது போல கடுக்காய்**

1. துவர்க்கும் 2. உறைக்கும் 3. கசக்கும்

**3. பறவைகளிலே பேசும் தன்மை வாய்ந்த பறவை எது?**

1. காகம் 2. புறா 3. கிளி

**4. முற்காலத்தில் எதன் மூலம் செய்திகள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது ?**

1. புறா 2. அன்னம் 3. மைனா

**5. சிங்கம் கர்ச்சித்தால் சுமார் எத்தனை கிலோ மீற்றர் வரை எதிரொலிக்கும்**

1. ஏழு கிலோ மீற்றர் 2. எட்டு கிலோ மீற்றர் 3. ஒன்பது கிலோ மீற்றர்

**6. வண்ணமீன்கள் என்னும் பாடத்தில் நாம் வாழும் வீடு எப்படி இருக்க வேண்டும்?**

1. மாடிவீடாக 2. அழகாக 3. ஓட்டுவீடாக

**7. பச்சைபெட்டிக்குள் வெள்ளை முத்து அது என்ன?**

1. வெண்டிக்காய் 2. மாதுளம்பழம் 3. பாகற்காய்

**8. நேற்று மழை பெய்தது. இவ்வாக்கியம் உணர்த்தும் காலம் என்ன?**

1. எதிர்காலம் 2. நிகழ்காலம் 3. இறந்தகாலம்

**9. அலங்கார மீன்கள் சுறுசுறுப்பாக நீந்தி விளையாடுவதற்கு என்ன காரணம்?**

1. ஒட்சிசன் 2. நீர் 3. செட்டை

**10. நெருப்பில் பட்டுச் சிவந்தவனுக்கு நீண்ட ஆயுள் அவன் யார்?**

1. சாம்பல் 2. செங்கல் 3. கருங்கல்

**11. நீல நிறத் தொட்டி எதற்கு பயன்படுத்தப்படுகின்றது இவ்வாக்கியத்தில் வரும் நிறுத்தற்குறி என்ன**

1. வினாக்குறி 2. முற்றுப்புள்ளி 3. வியப்புக்குறி

**12. பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற குப்பைகள் போட பயன்படுத்தப்படும் தொட்டியின் நிறம் என்ன?**

1. நீல நிறத்தொட்டி 2. சிவப்பு நிறத்தொட்டி 3. செம்மஞ்சள்

**13. பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும் .இது ஒரு**

1. அறிவித்தல் 2. அறிவுறுத்தல் 3. கட்டளை

**14. நூலகத்திற்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது.இது ஒரு**

1. கட்டளை 2. அறிவித்தல் 3. அறிவுறுத்தல்

**15. குதிரை அண்ணா நீங்கள் மிக வேகமாக ஓடியிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் என்று கூறிய பிராணி யாது?**

1. முயல் 2. நாய் 3. குதிரை

**16. காற்றில்............ பூக்கள்**

**கவிஞர்............ பூக்கள் இவ் இடைவெளியில் வரவேண்டிய சொற்கள் எவை?**

1. பாடும், ஆடும் 2. ஆடும், பாடும் 3. சிவப்பு, ஆடும்

**17. பச்சைக் கிளி பறந்தது. இதில் வரும் எழுவாய் அடைமொழி**

1. பச்சைக் 2. கிளி 3. பறந்தது

**18. பருந்து உயரப் பறந்தது. இதில் வரும் பயனிலை அடைமொழி**

1. பருந்து 2. பறந்தது 3. உயரப்

**19. கிளித்தட்டு விளையாட எத்தனை அணியினர் தேவை?**

1. இரு அணியினர் 2. மூன்று அணியினர் 3. ஏழு அணியினர்

**20. கீழ்வரும் பாடலின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன அவற்றை சரியாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை எது?**

A- **பாடம் மனதில் பதிவாகும்**

B- **பல முறை படித்துப் பார்த்தால் தான்**

C **-படித்தவை கல்மேல் எழுத்தாகும்**

D- **பலமுறை நினைத்துப் பார்த்தால் தான்**

1. A C B D 2. A B D C 3. B A D C

**(2 x 20= 40 புள்ள)**

**02) பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.**

1.ஒளி - ...................... 2. குளம் - ...................

3. வீதி - ..................... 4. நாடு - ....................

5. விளக்கு - ................... (5புள்ளி)

**03)பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. இயற்கை - ............................ 2. காடு - ............................
3. துன்பம் - ................................ 4. வெற்றி - ........................
5. தொடக்கம் - ........................... (5புள்ளி)

**04) பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ஆதி சென்ற ................. கரடு முரடாகக் காணப்பட்டது.
   (வலி, வளி, வழி)
2. பாடசாலையின் மணி .......................... சில நிமிடங்களுக்கு முன் கேட்டது.
   (ஒளி, ஒலி, ஒழி)
3. தங்கை ........................... சாப்பிட்டாள். (பலம், பளம், பழம்)
4. டிலானி ........................... மாதம் பிறந்தாள் ( ஆனி, ஆணி)
5. தம்பி இரும்பு ..............................யை பலகையில் அடித்தான். (ஆணி, ஆனி)

(1x5= 5)

**05) கீழ்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக?**

1. பூ மலர்ந்தது ..........................................................................................
2. அது பறந்தது ..........................................................................................
3. அவன் போனான் .......................................................................................... (06 புள்ளி)

**06) வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக**

1. கடிகாரம், கதிரை, மேசை, கடடில்
2. பூனை, கிளி, புறா, மைனா
3. காது, கால், தலை, மூச்சு
4. திங்கள், வெள்ளி, தை, புதன்
5. வாழைப்பழம், கத்தரிக்காய், தோடம்பழம், மாதுளம்பழம் (5 புள்ளி)

**07) பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

1. யானைகள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன (          )
2. வரிக்குதிரைகள் கூட்டமாக வாழ விரும்புவதில்லை (          )
3. பூங்குன்றம் ஒரு அழகிய கிராமம் (          )
4. நாங்கள் தான் உங்கள் கைகள் (          ) (4 புள்ளி)

**08) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. மா + மரம் =
2. நாய் + குட்டி =
3. நீலம் + வானம் =
4. யானை + தந்தம் =
5. மரம் + வேர் =

(5 புள்ளி)

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. தேன்கூடு =
2. முட்செடி =
3. மரங்கொத்தி =
4. மரப்பொந்து =
5. பாலைவனம் =

(5 புள்ளி)

**09) பின்வரும் பாடலை வாசித்து, I- V வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

சிலு சிலு சிலுவென மழை
சிரிக்க வைப்பது மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை

மழை மழை இனியது மழை
மகிழ்ச்சி தருவது மழை
மலர்களை நனைப்பது மழை
மண் வாசனை தருவது மழை

-செல்லகணபதி-

1. **பூக்களை** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது?

.....................................................

2. **பாட்டம்** என்பதன் ஒத்து ஒலிக்கும் சொல் எது?

.....................................................

3. **வெயில்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல் எது?

.....................................................

4. மண்+ வாசனை என்பதைச் சேர்ந்து எழுதுக?

.....................................................

5. மலர்களை நனைப்பது எதுவெனக் கவிஞர் கூறுகின்றார்?

.....................................................

6. மழை என்ற சொல் எத்தனை தடவைகள் வந்தன?

.....................................................

7. இப்பாடலை பாடியவர் யார்?

.....................................................

(14 புள்ளி)

**10) எனது வீடு என்னும் தலைப்பில் 04 சொற்களுக்கு குறையாமல் 03 வாக்கியம் எழுதுக?**

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(6 புள்ளி)